CAUVERY COLLEGE FOR WOMEN (Autonomous)

**காவேரி மகளிர் கல்லூரி (தன்னாட்சி),**

**திருச்சிராப்பள்ளி-18**

**தமிழாய்வுத்துறை**

**மற்றும்**

**சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**

**இணைந்து நடத்தும்**

**பன்னாட்டுக் கருத்தரங்கம்**

**(இணையவழி)**

# “செவ்விலக்கியங்களில் காணலாகும் இலக்கியக் கோட்பாடுகள்”

## “Literary theories in Classical Literature”

## நாள் : 14.07.2022 - 15.07.2022

*******

**கட்டுரையைப் பின்வரும் மின்னஞ்சல் மூலமாக சமர்ப்பிக்க வேண்டும்.**

**E mail: tamilintseminar@gmail.com**

தொடர்புக்கு:
8973773994

### ஒருங்கிணைப்பாளர்கள்

**பேரா. முனைவர் ச. இராமலட்சுமி**

துணை முதல்வர் & தலைவர், தமிழாய்வுத்துறை,

காவேரி மகளிர் கல்லூரி (தன்னாட்சி),

திருச்சிராப்பள்ளி – 620018

**முனைவர் ப. சசிரேகா**

உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை,

காவேரி மகளிர் கல்லூரி (தன்னாட்சி),

திருச்சிராப்பள்ளி – 620018

### ஒருங்கிணைப்புக் குழு

**முனைவர் அ. இரா. கோமதி, இணைப்பேராசிரியர்**

**முனைவர் அ. யசோதா, இணைப்பேராசிரியர்**

**முனைவர் ந. சுபா, இணைப்பேராசிரியர்**

**முனைவர் வி. கவிதா, இணைப்பேராசிரியர்**

**முனைவர் மு. ஜெயலெட்சுமி, உதவிப்பேராசிரியர்**

**முனைவர் தி. மணிமொழி, உதவிப்பேராசிரியர்**

**முனைவர் பா. கவிதா, உதவிப்பேராசிரியர்**

**முனைவர் மே. க. வசந்தி, உதவிப்பேராசிரியர்**

**முனைவர் இரா. வனிதா, உதவிப்பேராசிரியர்**

**முனைவர் வி. சத்யவதி, உதவிப்பேராசிரியர்**

**முனைவர் க. ராதிகா, உதவிப்பேராசிரியர்**

**முனைவர் மு. அனு, உதவிப்பேராசிரியர்**

**முனைவர் மா. ஆசியாதாரா, உதவிப்பேராசிரியர்**

**முனைவர் க. அகல்யா, உதவிப்பேராசிரியர்**

**முனைவர் இர. கீர்த்தனா, உதவிப்பேராசிரியர்**

**திருமதி செ. புனிதா, உதவிப்பேராசிரியர்**

**முனைவர் தெ. அகிலா, உதவிப்பேராசிரியர்**

**திருமதி பெ. அபிராமி, உதவிப்பேராசிரியர்**

### மதிப்பிற்குரியீர்,

வணக்கம்.

### தமிழாய்வுத்துறை, காவேரி மகளிர் கல்லூரி (தன்னாட்சி)

திருச்சிராப்பள்ளியில் 1984 ஆம் ஆண்டு ரெட்டி கல்வி அறக்கட்டளையினரால் தமிழகத்தின் முதல் சுயநிதிக் கல்லூரியாகக் காவேரி மகளிர் கல்லூரி தொடங்கப்பட்டது. தற்போது பதினாறு இளங்கலைப் பாடப்பிரிவுகளுடனும், பத்து முதுகலைப் பாடப்பிரிவுகளுடனும் ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட மாணவியரோடு தன்னாட்சிக் கல்லூரியாக வளர்ந்துள்ளது.

செம்மொழியாம் தமிழ்மொழி 1985ஆம் ஆண்டு காவேரி மகளிர் கல்லூரி தமிழ்த்துறையில் பகுதி I தமிழ்ப்பாடமாக தொடங்கி, 2003 ஆம் ஆண்டு இளங்கலைத் தமிழ் இலக்கியமாகவும், 2011ஆம் ஆண்டு முதல் முதுகலைத் தமிழிலக்கியம் மற்றும் முனைவர் பட்ட ஆய்வுத்துறையாகவும் செயல்பட்டுவருகின்றது. காவேரி மகளிர் கல்லூரித் தமிழாய்வுத்துறைத் தற்போது சர்வதேசத் தமிழ் ஆய்விதழுடன் இணைந்து “செவ்விலக்கியங்களில் காணலாகும் இலக்கியக் கோட்பாடுகள்” எனும் பொருண்மையில் இரண்டு நாள் பன்னாட்டுக் கருத்தரங்கம் நடத்தத் திட்டமிட்டுள்ளது. பேராசிரியர்கள் மற்றும் ஆய்வாளர்கள் கட்டுரைகள் வழங்கி சிறப்பிக்குமாறு அன்புடன் வரவேற்கிறோம்.

### சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், இந்தியாவின் முதல் Google Scholar, CrossRef indexed மற்றும் DOI எண் பதிவுபெற்ற தமிழ் ஆய்விதழாகவும், பல்கலைக்கழக மானியக்குழுவின் அங்கீகாரம் பெற்ற ஆய்விதழாகவும், பல்வேறு ஆய்வு மேம்பாட்டுப் பயிலரங்குகளையும் கருத்தரங்குகளையும் முன்னெடுத்துத் தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கின்ற ஆய்விதழாகவும் இருந்து வருகின்றது. அத்துடன் தமிழாய்வுகளை

உலகத்தரத்திற்கு உயர்த்தும் நோக்கில் ஆய்வுப்புல வல்லுநர்களின் மதிப்பீட்டைப் பெற்றுத் தரமான ஆய்வுக் கட்டுரைகளை வெளியிடுதல், அவற்றை உலகளாவிய பயன்பாட்டிற்கும் அங்கீகாரத்திற்கும் ஏற்றவகையில் எண்ணிமப்படுத்துதல் (Digitization), குறுந்திட்ட ஆய்வுகளுக்கு நிதியுதவி அளித்தல் முதலிய பணிகளைத் தொடர்ந்து செயல்படுத்திவருகின்றது. மேலும் பன்னாட்டுத் தமிழறிஞர்களோடு தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டு தமிழ் ஆய்வு வளர்ச்சிக்கான முன்னெடுப்புப் பணிகளை மேற்கொள்ளுதல், ஆய்வாளர்களுக்கும், ஆய்வுப் புலஅறிஞர்களுக்குமிடையே ஆய்வுசார்ந்து உரையாடுவதற்கும் விவாதிப்பதற்குமான வாய்ப்புகளையும், அதற்கான சூழலையும் ஏற்படுத்தித் தருதல், தமிழ்ச்சூழலில் இதுவரையிலான ஆய்வுப்போக்குகளையும் அவற்றின் போதாமைகளையும் மதிப்பிட்டு, புதியகளங்களில், புதிய அணுகுமுறைகளில் ஆய்வு செய்ய ஆய்வாளர்களை ஊக்குவித்தல், ஆய்வுத்திறன் மேம்பட்ட செழுமைமிக்கதொரு ஆய்வுச்சூழலை உருவாக்குதல் போன்ற பல்வேறு ஆய்வுச் செயல்பாடுகளில் அதிக அக்கறையோடு முன்னிற்கின்றது. இதன்தொடர்ச்சியாக இக்கருத்தரங்கை நடத்த தமிழாய்வுத்துறை, காவேரி மகளிர் கல்லூரியுடன் இணைகிறது.

### கருத்தரங்க நோக்கம்

தமிழிலக்கியக் கோட்பாடுகள் குறித்த விவாதங்கள் சமீபகாலங்களில் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இந்நிலையில் தமிழில் கோட்பாட்டுருவாக்கத்திற்கான சாத்தியக்கூறுகளை இலக்கியங்களில் காணலாகும் கோட்பாட்டாக் கத்திற்காண சிந்தனைகளை இனங்கண்டு எழுதவும் அவற்றை இலக்கியங்களில் பொருத்திப் பரிசோதித்துப் பார்க்கவுமான முயற்சியாகவே இக்கருத்தரங்கம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

### ஆய்வுப் பொருண்மைகள்

தமிழிலக்கியக் கோட்பாட்டாக்கச் சிந்தனைகளை அடிப்படையாகக் கொண்டு தமிழ் செவ்வியல் இலக்கியங்களாக அங்கீகரிக்கப்பட்டுள்ள 41 நூல்களில் ஆய்வுநிகழ்த்தலாம். திணைக் கோட்பாடு, கூற்றுக் கோட்பாடு, மொழிதல் கோட்பாடு, கவிதையியல் கோட்பாடு, தொனிக் கோட்பாடு, மெய்ப்பாட்டியல் கோட்பாடு, இலக்கிய வகைக் கோட்பாடு, முருகியல் கோட்பாடு, அணியியல் கோட்பாடு, பொருள்கோளியல் கோட்பாடு, காப்பியமரபுக் கோட்பாடு, இலக்கிய அறிவாராய்ச்சியல் கோட்பாடு என இன்னபிற தமிழிலக்கியக் கோட்பாட்டாக்கச் சிந்தனைகளும் ஆய்வு அணுகுமுறைகளாக அமையலாம். கருத்தரங்கில் பங்கேற்கும் ஆய்வாளர்கள் தங்களுடைய ஆய்வுச் கட்டுரையை 30.05.2022 திகதிக்குள் சமர்ப்பிக்க வேண்டும். கருத்தரங்க நாளன்று தங்களது ஆய்வுக்கருத்துக்களை அறிஞர்கள் மற்றும் பங்கேற்பாளர்கள் முன்னிலையில் உரைக்கோவையாக வழங்கவேண்டும் (Oral Presentation) கருத்தரங்க பின்னூட்டத்தினடிப்படையிலும், மதிப்பீட்டினடிப்படையிலும் தேர்வுசெய்யப்பட்ட கட்டுரைகள் மட்டுமே சர்வதேசத் தமிழ் ஆய்விதழில் வெளியிடப்படும்.

### ஆய்வுக்கட்டுரை அமைப்பு

பின்வரும் இணைய இணைப்பில் கட்டுரை அமைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. கட்டாயம் அதில் கொடுக்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி கட்டுரையாளர் கட்டுரையைச் சமர்ப்பிக்க வேண்டும்.

**Link: https://iorpress.org/irjt/file/template.pdf**

சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரைகள் ஆய்விதழுக்கு அனுப்பிவைக்கப்படும். அவ்வாறு பெறப்பட்ட கட்டுரைகள் சர்வதேசத் தமிழ் ஆய்விதழின் (UGC – Care Listed Journal) வல்லுநர் குழுவின் மதிப்பீடு மற்றும் திருத்தங்களுக்கு உட்படுத்தப்படும். அதில் தேர்வான கட்டுரைகள் மட்டும் இணையத்தில் சிறப்பிதழாக வெளியிடப்படும். தேர்வு செய்யப்பட்ட கட்டுரையாளர்கள் வெளியீட்டுக் கட்டணம் ரூ 2000 செலுத்துதல் வேண்டும். (ஆய்விதழில் வெளியிடுவதற்கான கட்டணம் தேர்வு செய்யப்பட்ட பின்பு பின்னர் பெறப்படும்).

## கருத்தரங்கில் பங்கேற்கப் பதிவுக்கட்டணம் இல்லை

| | |
|---|---|
| **ஆய்வுக்கட்டுரையைச் சமர்ப்பிப்பதற்கான இறுதிநாள்** | 30.05.2022 |
| **ஆய்வுக்கட்டுரையைச் சமர்ப்பிப்பதற்கான மின்னஞ்சல் முகவரி** tamilintseminar@gmail.com | |